வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## gFjp I

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 4 | 21) 2 | 31) 2 |
| 2) 2 | 12) 4 | 22) 2 | 32) 5 |
| 3) 2 | 13) 2 | 23) 4 | 33) 3 |
| 4) 4 | 14) 3 | 24) 2 | 34) 5 |
| 5) 2 | 15) 4 | 25) 4 | 35) 1 |
| 6) 3 | 16) 2 | 26) 5 | 36) 2 |
| 7) 5 | 17) 3 | 27) 1 | 37) 1 |
| 8) 4 | 18) 1 | 28) 1 | 38) 3 |
| 9) 4 | 19) 4 | 29) 4 | 39) 4 |
| 10) 5 | 20) 5 | 30) 5 | 40) 2 |

## பகுதி யு

1) படம் குறித்தல்

## பகுதி டீ

2) 1. மத்திய மலைநாடு

- மலை, நீர், காடு போன்ற அரண்களால் பாதுகாப்பு பெற்றமை.
- தனியான அரசியல் அலகாக செயற்பட்டமை, பிற்பட்ட காலத்தில் மலையரட்டை என்ற நிர்வாக அலகாக மாறியமை.
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளின் போது பாதுகாப்பளித்த இடமாக காணப்பட்டமை.
- உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிணக்குகளின் போது தலைவர்கள் மற்றும் பிரபுக்கள் பாதுகாப்புக் கருதி இப்பகுதிக்குச் சென்றமை.
  உதாரணமாக : துட்டகாமினி இளவரசன் மலையகத்துக்குச் சென்றமை.
  வலகம்பாகு அரசன் பாதுகாப்புக் கருதி மலையகத்துக்குச் சென்றமை.

2. ஆறுகள்.

- மத்திய மலைநாட்டிலிருந்து உற்பத்தியாகி நாட்டின் நாலா திசைகளிலும் பாய்ந்து செல்கின்ற ஆறுகள் பல காணப்படுகின்றமை.
- நதிகளை அண்டி ஆரம்ப குடியிருப்புக்கள் தோன்றியதுடன் குடியிருப்புகளின் பரம்பலிற்கும் இவை தாக்கம் செலுத்தியமை. (நதிக்கரையோரமாக உள்நாட்டிற்குள்ளும் குடியிருப்புக்கள் பரவியமை)
- பிரதான நகரங்கள் தோன்றுவதற்கு நதிகள் செல்வாக்குச் செலுத்தியமை.
- விவசாயத்துக்கு உதவியமை.
- நாட்டின் எல்லைகளை குறிக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கும் போக்குவரத்துக்கும் நதிகள் பயன்படுத்தப்பட்டமை.
- நதிக் கரையோரமாக பாதைகள் தோன்றியமை.
- நதிகள், ஓடத்துறைகளை அண்டி வியாபார நிலையங்கள் தோன்றியமை.

3. இந்தியாவிற்கு அண்மையிலான அமைவு

- இந்தியாவிற்கு அருகில் அமைந்திருப்பதனால் அரசியல், பொருளாதார, சமய, கலாசார துறைகளில் இந்தியாவின் செல்வாக்கு ஏற்பட்டமை.
  அரசியல் தாக்கம் :
  - மக்கள் இடப்பெயர்வு மற்றும் ஆக்கிரமிப்புக்கள் ஏற்பட்டமை.

agaram.lk

- யுத்த உதவிகள் பெற்றமை, வேலைக்கார படையினரின் சேவையைப் பெற்றமை.
- பட்டாபிஷேகம், பரிபாலனமுறை, பதவிப் பெயர்கள் போன்றன இந்தியர்களிமிருந்து கிடைத்தமை.
- தென் இந்தியாவின் அரசியல் மாற்றங்கள் உடனடியாக இலங்கையையும் பாதித்தமை.

பொருளாதாரம்
- வியாபார தொடர்புகளைப் பேணியமை.
- விவசாயம், மிருக வளர்ப்பு முறைகள்.
- பல்வேறு கைத்தொழில்கள் (18 குலங்களைச் சேர்ந்தவர்கள்) சங்கமித்த தேரியுடன் வந்தமை.

சமய கலாசார தொடர்புகள் :
- பௌத்த சமயம், மஹாயானப் பிரிவு, இந்து சமயங்களின் தோற்றம்.
- எழுத்துக்களின் தோற்றத்துக்கு இந்தியாவின் செல்வாக்கு.
- சாதி முறைமை, சடங்கு முறைகள் போன்றவற்றில் இந்தியாவின் தாக்கம்

திருமணத் தொடர்புகள்.
- கலை மற்றும் கட்டிடக் கலைத் துறைகளில் ஏற்பட்ட இந்தியாவின் செல்வாக்கு.

3) வட்டகாமினி அபய மன்னன் உள்நாட்டு, வெளிநாட்டுச் சவால்களை எதிர்கொண்ட அரசனாவான். இருப்பினும் அவை அனைத்தையும் வெற்றிகொண்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்ட அரசன் என்ற வகையில் இலங்கை வரலாற்றில் இவன் சிறப்பிடம் பெறுகின்றான்.
- மகாரத்தகனை கொலை செய்து அரசைப் பெற்றமை.
- தீக பிராமணனின் கிளர்ச்சி.
- 7 தமிழர்களின் ஆக்கிரமிப்பு (புலகத்த, பாகிய, பனையமாற, பிளையமாற, தாடிகன்)
- கிரி என்ற சமணத்துறவியின் எதிர்ப்பு.
- பமினிதியா கடும் பஞ்சத்தை எதிர்கொண்டமை.
- படைத்தளபதிகள் அரசை கைவிட்டுச் சென்றமை.

அபயகிரி விகாரை நிர்மாணித்தல்.
- கி.மு 89 ஆம் ஆண்டு தாடிகனைக் கொலை செய்து அனுராதபுரத்தின் ஆட்சியைப் பெற்றதுடன் கிரி என்ற சமணத்துறவியின் பள்ளியை உடைத்து அபயகிரி விகாரையை நிர்மாணித்தல்.
- ஒளிந்திருந்து படைகள் திரட்டிய போது தனக்கு உதவி செய்த குப்பிகல திஸ்ஸ தேரரிற்கு அபயகிரி விகாரையை கையளித்தல்.
- மகாவிகாரையிலிருந்து வெளியேறிய சில பிக்குகள் அபயகிரியில் நுழைதல், சமயத்தில் பிளவு ஏற்பட வழி அமைத்திருந்தது.
- அரசனின் விஷேட ஆதரவு அபயகிரி விகாரைக்கு கிடைத்தமை.
- பிற்பட்ட காலங்களில் மஹாயானக் கருத்துக்கள் அபயகிரி விகாரையை வந்தடைந்தமையும், வெளிநாட்டு பௌத்த நிலையங்களுடன் தொடர்புபட்டமையாலும், சர்வதேச பௌத்த மத்திய நிலையமாக அபயகிரி வளர்ச்சியடைந்தது.

திரிபிடகம் எழுத்து வடிவம் பெற்றமை.
- இவ்வரசனது காலத்தில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் காரணமாக ஏராளமான மக்கள் இறந்தனர். பௌத்த பிக்குகள் நாட்டை விட்டு வெளியேறினர். இந்நிலையில் வாய்மொழியாக மனனம் இட்டுப் போதிக்கப்பட்டு வந்த திரிபிடகத்தை நூலுருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
- பிராந்திய நிர்வாகிகளின் ஆதரவுடன் மாத்தளை ஆலுர்க குகையில் திரிபீடகம் மற்றும் அட்டகதா முதற் தடவையாக நூலுருவாக்கப்பட்டது.
- பல்வேறு சவால்களிற்கு மத்தியில் தேரவாத பௌத்தம் இவரது காலத்தில் பாதுகாக்கப்பட்டது.

4)

1.
- பண்டுகாபயன் அபய வாவியையும் தேவநம்பிய தீஸன் திஸ்ஸவாவி, நுவர வாவிகளை நிறுவியமை.
- வசப மன்னன் பாரிய குளங்களைக் கட்டுவதற்கு அத்திவாரமிட்டமை 11 குளங்களையும் (மஹாவிலாச்சிய, நொச்சிப் பொத்தான) 12 கால்வாய்களையும் (எலகரக் கால்வாய்) நிறுவியமை.

agaram.lk

- மஹாசேனன் 16 குளங்களையும் 1 கால்வாயையும் நிறுவினான். அவற்றுள் மின்னினேரியாக் குளம் முக்கியமானதாகும். கௌடுலு வாவியை நிர்மாணித்து அதனை மின்னேரியாவுடன் தொடர்புபடுத்தினான். பப்பதந்த கால்வாயை அமைத்து மஹாவலி கங்கையின் நீரை கிழக்குத் திசை நோக்கி எடுத்துச் சென்றமை. யான் ஓயாவை மறித்து ஹுருலு வாவியை அமைத்தமை. தெதுறு ஓயாவின் கிளைநதிகளை மறித்து குளங்கள் நிர்மாணித்தமை. இவ்வாறான பணிகளினால் தெய்வம் எனப் போற்றப்படுகின்றான்.
- முதலாம் உபதிஸ்ஸன் சிறியளவிலான குளங்கள் 6 ஐ நிறுவியதாக குறிப்பிடப்பட்டாலும் அவற்றை இனங்காண்பது சிரமமாகும்.
- தாதுசேனன் 18 குளங்களையும் 1 கால்வாயையும் நிறுவினான். இவற்றுள் கலாவாவி, ஜயகங்கை கால்வாய், (கலா வாவியிலிருந்து திஸா வாவிக்கு நீரை அனுப்புவதற்காக) முக்கியமானதாகும். யோத வாவி, பணம் குளம், மா எலிய போன்ற குளங்களையும் நிறுவியுள்ளான்.

  2ஆம் முகலன் - பதவிய, நாச்சதுவ, மாமடுவ குளங்களையும் 1ஆம் அக்கபோ – தண்ணிமுறிப்புக் குளம், 2ஆம் அக்போ – கிரித்தலை, கந்தளாய் குளங்களையும் அமைத்தமை.
- 8, 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் பாரிய குளங்கள் அமைக்கப்பட்டதாக தகவல்கள் இல்லை. துப்போவ, பாவக்குளம், வாஹல்கட, வவுனிக்குளம், அல்லை, ஹொரிவில, கண்டல போன்றன இக்காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- முதலாம் விஜயபாகு ஊவா மாகாணத்தில் புதுகுண வாவியை அமைத்துள்ளான்.
- 1ஆம் பராக்கிரமபாகு 16.3 பாரிய குளங்களையும் 2376 சிறிய குளங்களையும், 165 கால்வாய்களையும் 341 கலிங்கல் தொட்டிகளையும் நிறுவியதாகவும், 1753 கால்வாய்களை புனர் நிர்மாணம் செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. நிர்மாணிக்கப்பட்ட குளங்களில் பராக்கிரம சமுத்திரமும் அதனுடன் இணைந்த கால்வாய்த் தொகுதியும் முக்கியமானதாகும். தெதுறு ஓயாவை கொட்டபத்த, சூகர நிஜ்ஜர, தோறுதனிதிக்த என்ற இடங்களில் மறித்து அணை எழுப்பியமை.

2. நீர்ப்பாசனத் தொழில்நுட்பம்
   - சிறிய குளங்களை விட பாரிய குளங்களில் இக்கால நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திறன் வெளிக்காட்டப்பட்டுள்ளது. நிலத்தை அளத்தல், மட்டப்படுத்தல் போன்றவற்றில் விஷேட பொறியியல் அறிவை பெற்றுள்ளனர். இலங்கைப் பொறியியலாளர்களின் தொழில்நுட்ப அறிவு தென்இந்தியாவிங்கு வழங்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. சில கால்வாய்களின் சாய்வு 1 மஅ க்கு 6 அங்குலமாகும்.
   - இரு பகுதிகளிலும் காணப்பட்ட மலைகளை இணைத்து குளக்கட்டு அமைத்துள்ளமை. எனினும் அகத்திமுறிப்பு, யோதவாவிகளின் அமைப்பு சற்று வித்தியாசமானதாகும்.
   - கலிங்கல் தொட்டி, குளக்கட்டு என்பன உயரத்திலிருந்து பள்ளத்தை நோக்கி சாய்வாக அமைந்துள்ளமை. அலைதாங்கி ஏற்படுத்தியமை முக்கியமானதாகும். பல குளங்களைத் தொடர்புபடுத்தி கால்வாய்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை.

5) பொருத்தமான சிறுகுறிப்புகளுக்கு 8 புள்ளி வீதம் வழங்குக.

**பகுதி ஊ**

6)

1. நிர்வாகம்
   - ஒல்லாந்தக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் மூலம் தமது நிர்வாகத்தை மேற்கொண்டனர்.
   - பத்தேவியாவில் இருந்த கீழைத்தேச ஒல்லாந்த நிர்வாகத்தின் தலைமையகத்திலிருந்து கொழும்பிலிருந்த ஒல்லாந்த நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இலங்கையின் நிர்வாகத் தலைமையமாகக் கொழும்பு விளங்கியது.
   - நிர்வாகப் பிரதேசங்கள் கொமாண்டரிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
   - சுதேச நிர்வாக முறை, பிரதேசப் பிரிவுகள், பதவிகள் என்பன நிலவின.
   - உயர் பதவிகளுக்கு ஒல்லாந்தர் நியமிக்கப்படல், தோம்பு முறை.

agaram.lk

2. நீதித்துறை

- ஒல்லாந்த நிர்வாகத்தின் கீழ் செயற்பட்ட சுதேச பிரதானிகளுக்கு நீதித்துறை அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.
- அவர்களுக்கு மேல் பிஸ்கல் திசாவ நீதிமன்றங்கள் இருந்தன.
- ராத்வான சிவில்றாட்ஸ் நீதிமன்றங்கள் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்திருந்தது.
- லான்ராத் (நிலம் தொடர்பான நீதிமன்றம்) கொழும்பு, யாழ்ப்பாணம், கற்பிட்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, காலி ஆகிய இடங்களில் இருந்தது.
- பத்தேவியாவில் சிரேஷ்ட நீதிமன்றம் காணப்பட்டது.
- உரோமன் - டச்சுச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- யாழ்ப்பாணத்தில் தேசவழமைச்சட்டம் தொடர்ந்தும் வழக்கில் இருந்தது.
- தேசங்களிற்கேற்ப – கண்டிச் சட்டம், மட்டக்களப்பு – முக்குவர் சட்டம் நடைமுறையில் இருந்தது.

3. கல்வி

- பாடசாலை மூலம் கல்வி அளிக்கப்பட்டது.
- எண் கணிதம், இலத்தீன் மொழி, புவியியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டது.
- ஸ்கொலக்கல், கமிஷன் மூலம் பாடசாலை நிர்வாகம் நடைபெற்றது.
- பாடசாலை செல்லாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.
- பங்கு பாடசாலைகள் (ீயசளைா ளஉாழழடள) ஆரம்பிக்கப்பட்டன.
- அநாதைப் பிள்ளைகளுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- சமயம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டது.
- ஆலயத்திற்கு அருகில் பாடசாலைகள் நிறுவப்பட்டன.
- அச்சியந்திரம் அறிமுகம் செய்யப்படல்.

7)
- 1815 இல் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்வந்த பின்னர் ஏற்பட்ட முதலாவது ஆங்கில எதிர்ப்புக் கலவரம் இதுவாகும்.
- 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி கண்டி இராச்சியத்தில் நிலவிய முடியாட்சியை நீக்கி, அங்கு பிரித்தானிய ஆட்சி நிறுவப்பட்டதால் கண்டி இராச்சியம் தன் சுயாதனத்தை இழந்தது.
- 1817 – 1818 இல் கண்டி இராச்சிய மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார்கள்.
- வெளிநாட்டவரின் அச்சுறுத்தல்களுக்குத் தைரியமாக முகங்கொடுத்த கண்டி இராச்சிய மக்கள், ஆங்கிலேயரின் ஆட்சியில் அவை அனைத்தையும் செயற்படுத்தாமை.
- உடன்படிக்கையில் பௌத்த மதமும், மதம தொடர்பான உடைமைகளும் பாதுகாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதிலும் அரசர்கள் காலத்தில் தமக்குக்கிடையில் உதவியும் கௌரமும் கிடைக்காமையால் பிக்குகள் மனந் தளர்ந்தனர். பௌத்த அரசன் ஒருவனை நியமிப்பது அவர்களது நோக்கமாகவும், எதிர்பார்ப்பாகவும் அமைந்தது.
- தம்மால் காணமுடியாத அரசனுக்கு சார்பாக செயற்படுவதற்கு மக்கள் விரும்பவில்லை. முன்னர் நிலவிய முடியாட்சியையே விரும்பினர்.
- ஊவா வெல்லஸ்ஸவில் முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமையே உடனடிக் காரணமாகியது.
- எனினும் இந்தப் போராட்டம் கண்டி இராச்சியத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டமை, கண்டி இராச்சியத்தில் சில பிரதேங்களில் முக்கிய பிரதானிகள் ஒத்துழைப்பு வழங்காமை ஆகியவற்றைக் கொண்டு இது முழுமையான ஒரு சுதந்திரப் போராட்டம் அல்ல எனத் தர்க்க ரீதியாக விவாதிக்கலாம்.

8)

A.
- 1947 இல் சோல்பரி ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி இது உருவாக்கப்பட்டது.
- அரசாட்சி, சட்டவாக்கம், சட்ட நிர்வாகம், நீதி ஆகியவற்றைக் கொண்ட பாராளுமன்ற அமைச்சரவை முறையிலான அரசியல் திட்டம் ஆகும்.

- பிரித்தானியா முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் செயற்பட்டார்.
- பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை செனற்சபை ஆகிய இரு சபைகளைக் கொண்டிருந்தது.
- மக்கள் பிரதிநிதிகள் சபையில் 101 பிரதிநிதிகள் இடம் பெற்றனர். இவர்களுள் 95 பேர் வாக்குரிமை மூலமும், 6 பேர் ஆளுநர் நாயகத்தினாலும் நியமிக்கப்பட்டனர்.

agaram.lk

- சட்டவாக்கம், நிதி தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்திடம் இருந்தது.
- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அல்லது

B. 1956 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்.

- 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5, 7, 10 ஆந் திகதிகளில் தேர்தல் நடைபெற்றமை.
- தேர்தல் பிரசாரத்தில் செயற்பாடுகளில் காணப்பட்டவைகள்.
    - சிங்கள மொழி மாத்திரம் அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளல்.
    - 1947 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை விமர்சித்தல்.
    - பிக்குவால் உருவாக்கப்பட்ட புத்தசாசன ஆணைக்குழுவால் புத்த சமயம் தொடர்பாக அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பற்றிக் கூறப்படல்.
    - சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரும் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மத்தியில் சங்கத்தினர், வைத்தியர், ஆசிரியர், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளடங்கிய பிரிவினர் அணி திரண்டமை.
    - இந்த அணியினர் குடியேற்ற நாட்டு அரசியலமைப்பு முறையிலான அரசியலமைப்புக்குப் பதிலாக தேசியத்தை மதிக்கும் புதிய அரசியல் அமைப்பைப் பெறும் நோக்கில் செயற்பட்டமை.
    - இந்த அணியினர் திரு ளு. று. சு. னு பண்டார நாயக்காவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கொண்டமை.
    - இடதுசாரிக் கட்சிகள் முதலான பல்வேறு குருக்கள் அக்கட்சியுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி, அதன் கீழ் தேர்தலுக:கு முன் வந்தமை.

9) பொருத்தமான சிறுகுறிப்புகளுக்கு 8 புள்ளி வீதம் வழங்குக.

agaram.lk